DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.164/ 2024
Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தினோ ஜோசப் |
| Husband's / Name | : | ஜோசப் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | கிளை மேலாளர், கனரா வங்கி, கூடலூர் |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of June 2026.

**எதிரி ஆஜர். புகார்தாரர் ஆஜர் இல்லை. BNSS 279ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.**

முதல் விசாரணை:

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்று சாட்சியம் அளிக்கவந்துள்ளேன். புகார்தாரர் பிரபு எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அவரது சேமிப்பு கணக்கு எண். 110139581568 ஆகும். 01.04.2023 முதல் 31.03.2025 வரையிலான கணக்கு பரிவர்த்தணைகளை கொண்டு வந்துள்ளேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ.1 ஆகும்.** 2 வருடமாக தொடர்ச்சியாக கணக்கில் வரவு செலவு இல்லை. இரண்டு முறைகள் பணம் வரவு வந்துள்ளது. 16.10.2024ல் ரூ.20100/-, 31.12.2024ல் ரூ.27000/- கொசமற்றம் பைனான்சிலிருந்து அனுப்பபட்டுள்ளது. Self Deposit எதுவும் இல்லை. 01.01.2024 முதல் 30.04.2024 வரை ரூ.2095/- இருப்பு உள்ளது. 05.05.2024ல் எந்த பரிவர்த்தணையும் நடைபெறவில்லை. புகார்தாரர் காசோலை புத்தகம் வேண்டுமென்று வங்கியில் கேட்கவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.25 18:31:02 +0530

Judicial Magistrate, Fast Track Court (M.L)
Uthamapalayam

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.185/2024
Deposition of DW2

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.அன்னம் |
| Husband's Name | : | இராமசந்திரன் |
| Village | : | சின்னமனூர் |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | சொந்த தொழில் |
| Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22 day of April 2025.

எதிரி ஆஜர் .

<u>முதல் விசாரணை:</u>

1. நான் இந்த வழக்கில் எதிரியாவேன். முறையீட்டாளரை எனக்கு தெரியாது. முறையீட்டாளரிடம் நான் கடன் வாங்கவில்லை. எனக்கு கடன் வாங்கவேண்டிய அவசியமில்லை. எனக்கும், எனது கணவருக்கும் இடையே ஒரு வருடத்திற்கு முன்பு (2024) சண்டை ஏற்பட்டது. என்னை பழிவாங்கும் எண்ணத்தில் எனது காசோலையை முறையீட்டாளரிடம் கொடுத்து என்மீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார். காசோலையில் நான் எதுவும் எழுதவில்லை, கையொப்பமும் செய்யவில்லை. எனது கணவர் காசோலையை முறையீட்டாளரிடம் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது.

2. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தபிறகு தான் எனது கணவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். நானும், எனது கணவரும் முறையீட்டாளரின் வீட்டிற்கு சென்றபோது வழக்கை வாபஸ் பெறுவதாக என்னிடம் சொன்னார், ஆனாலும் வழக்கினை வாபஸ் பெறவில்லை.

<u>முறையீட்டாளர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. முறையீட்டாளரும், நானும் பக்கத்து வீட்டினர் என்றால் இல்லை. முறையீட்டாளரின் வீட்டிற்கு நான் சென்றுள்ளேன் என்றால் எனது

கணவருக்கு தெரியும், எனது கணவருடன் நானும் சென்றேன் அதனடிப்படையில் எனக்கு தெரியும். முறையீட்டாளர் சார்பில் எனக்குசட்ட அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். நான் அதனை பெற்றுகொண்டேன் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு படித்துள்ளேன். ஆங்கிலத்தில் கையொப்பம் செய்யும் அளவிற்கு படித்துள்ளேன் என்றால் தற்போது தான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்கிறேன்.

2. எனது காசோலையை எனது கணவர் முறையீட்டாளரிடம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என எனது கணவருக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி சட்ட அறிவிப்பினை படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். மேற்படி சட்ட அறிவிப்பிற்கு பதிலறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கைவசம் எத்தனை காசோலை வைத்துள்ளேன் என்றால் ஒரு காசோலை புத்தகம் வைத்துள்ளேன்.

3. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தவுடன் எனது கைப்பேசிக்கு குறுந்தகவல் வரும் என்றால் இதுவரை அப்படி ஒரு தகவல் வந்ததில்லை. எனது காசோலை போதிய பணமில்லை என்று திருப்பப்படும் என்று அறிந்தே காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவரை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தயார். நான் தாக்கல் செய்த எதிரி தரப்பு சாட்சி பட்டியலில் எனது கணவரை வேண்டுமென்றே சேர்க்காமல் தவிர்த்து விட்டு தற்போது எனது கணவரை சாட்சியாக விசாரிக்க தயார் என்று பெயரளவில் கூறுகிறேன் என்றால் சரியல்ல, நான் காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளதால் தண்டிக்கப்படவேண்டியவர் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

J.M, F.T.C(M.L),Uthamapalayam